**செ. கு. எண்:400** **நாள்:8.11.12**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 8.11.2012

தேனி மாவட்டம், **மஞ்சளாறு நீர்த்தேக்கத்திலிருந்து** தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலுள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலுள்ள ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு மஞ்சளாறு நீர்த்தேக்கத்திலிருந்து **9.11.2012 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டத்தில் 3,148 ஏக்கர் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் 2,111 ஏக்கர், ஆக மொத்தம் **5,259 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9